**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 86/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **பழனியம்மாள்** |
| Husband Name | : | **ராஜ்** |
| Address | : | **பெரம்பலூர்** |
| Age | : | 60/2025 |

**தேதி : 16.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பெரம்பலூரில் பாளக்கரையில் வெங்காய வியாபாரம் செய்துவருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு ஐப்பசி மாதம் தீபாவளி அன்று முதல்நாள் வியாபாரம் முடித்துவிட்டு வீட்டிற்கு செல்லும்போது என் பின்னால் வந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த 6 பவுன் செயினை பறித்துக்கொண்டு ஓடிவிட்டார். அருகில் உள்ளவர்கள் உதவியுடன் அந்த நபரை தேடிபார்த்தேன். ் அந்த இடத்தில் கும்பல் கூடிவிட்டது. அந்த நபர் டீ சர்ட் அணிந்திருந்தார். அந்த நபரை மறுபடியும் பார்த்தால் அடையாளம் காட்டுவேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். **புகார் மனு அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள். பிறகு ஒரு வருடம் கழித்து போலீஸார் என்னை காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நகை கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். மேலும் நகையை

திருடியரை பிடித்துவிட்டதாக சொன்னார்கள். அவரை காவல நிலையத்தில் வைத்து போலீஸார் அடையாளம் காட்டினார்கள்.

காணாமல் போன என்னுடைய நகையை போலீஸார் தங்க காசுகளாக மீட்டுள்ளதாக சொன்னார்கள். ஒரு பவுன் உள்ள நான்கு தங்க காசுகளை நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுசென்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள தங்க காசுகள் நான்நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்றதுதான். **நான்கு தங்க காசுகள் உள்ள புகைபடம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் மறுபடியும் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

சுமார் 8 லிருந்து 9 மணி அளவில் என்னுடைய செயினை அறுத்தார். பூமணம் திருமண மண்டபத்திற்கு அருகே சம்பவம் நடந்ததாக போலீஸார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது எனக்கு தெரிந்தவர்களோ, பொதுமக்களோ அங்கு இருந்தார்களா என்றால் இரவு நேரம் என்பதால் யாரும் இல்லை. இரவு நேரம் என்பதால் என் செயினை அறுத்தவர் யார் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே இரவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரை போலீஸார் எழுதிக்கொடுத்தார்கள். புகாரை என்னிடம் படித்துகாண்பித்தார்கள். புகாரில் 6 பவுன் செயின் பறித்துக்கொண்டதாக சொன்னேன். போலீஸார் விசாரணையில் 4 பவுன் திரும்ப கிடைத்ததாக சொன்னேன்.

புகாரில் நான் மட்டும்தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். காணாமல் போன என்னுடைய நகை கிடைத்துவிட்டதாக மதியம் 2.00 மணி அளவில் காவல் நிலையத்திற்கு சென்றேன். போலீஸார் பிடித்துவைத்திருந்த நபர் மாநிறமாக இருந்தார். உயரமாக இருந்தார். அவருடைய பெயர் சொல்லவில்லை. என்னை போலீஸார் ஒருமுறைதான் விசாரித்தார்கள்.

போலீஸார் என்னிடம் மாநிறமாக உள்ள நபரை அடையாளம் காட்டவில்லை என்றாலும், போலீஸார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும்,இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால்சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.